AUTHOR: No author available SECTION: NEWS PAGE: 4 PRINTED SIZE: 173.00cm² REGION: KL
MARKET: Malaysia PHOTO: Black/white ASR: MYR 503.00 ITEM ID: MY0058710256



04 MAY, 2024

## Rafizi: Higher gas imports if we don't switch to sustainable energy

Malaysian Nanban, Malaysia



# இறக்குமதி எரிவாயுவை மலேசியா நம்பி இருக்கும் காலம் வந்து விடும்



கோலாலம்பூர், மே 4-

ஒரு நிலையான மாற்று எரிசக்தி வளங்களுக்கு நாம் மாறாவிடில் அதிகமான எரிவாயு சக்தியை நாம் இறக்குமதி செய்தாக வேண்டும் என்று பொருளாதார அமைச்சர் ரஃபிஸி ரம்லி கூறினார்.

நாட்டில் குறைவான எண்ணெய் மற்றும் எரிவாயு உற்பத்தி நிலவியதால் கடந்தாண்டு நாம் 25 விழுக்காட்டு எரிவாயுவை இறக்குமதி செய்தோம். தற்போது கச்சா எண்ணெய் உற்பத்தி 4 லட்சம் பீப்பாய் களாக குறைந்திருக்கின்றன. நாம் எரிவாயுவை இறக்குமதி செய்கிறோம் என்பது பலருக்கு தெரியாது. இப்படியே நிலைமை போனால் 30 விழுக்காடு வரை நாம் எரிவாயு சக்தியை இறக்குமதி செய்ய வேண்டிய நிலை வரும்.

நம் மக்களுக்கு உண்மையைச் சொல்ல வேண்டும். அது வலிக்கின்ற ஓர் உண்மையாக இருக்கும் என்பதை மறந்து விடக்கூடாது என்றார் அவர்.

இதனிடையே நாட்டின் பொருளாதாரத்தை சீர் திருத்த வேண்டிய அவசியம் நேர்ந்துள்ளது என்று ரஃபிஸி தொடர்ந்து கூறினார். ஒரு பொருளாதார கட்டமைப்பு மட்டும் முக்கியமல்ல.

அது தொடர்பான சிந்தனை மாற்றமும் கலாச்சார மாற்றமும் அவசியம். இத்தகைய மாற்றங் கள் மிக எளிதாக வந்து விடாது. எத்தனையோ ஆண்டுகளின் தொடர்ச்சியாக வந்திருக்கும் தடைகளை மாற்றுவதற்கு இந்த சிந்தனை மாற்றம் வேண்டும் என்றார் அவர். எனவே கொள்கை அளவுகளில் திட்டங்களை மாற்றும் போதும் ஓர் ஆக்கப்பூர்வமான அணுகு முறை அவசியம் என்றார் அவர். இதற்கு ஒருங்கிணைக்கப்பட்ட முயற்சிகளை தொடர வேண்டும் என்று அவர் கூறினார்.

Provided for client's internal research purposes only. May not be further copied, distributed, sold or published in any form without the prior consent of the copyright owner.